# காலிங்கராயன் பாலத்தைப் பராமரிக்க கொங்கு ஆய்வு மையம் வேண்டுகோள்

பவானியாறு காவிரியுடன் சேரும் இடத்தின் அருகில் பவானியாற்றில் தடுப்பணை கட்டி, 91 கிலோமீட்டர் வாய்க்கால் வெட்டி சுமார் 21 ஆயிரம் ஏக்கர் நிலம் முப்போகம் பாசனம் பெறச் செய்தவர் வெள்ளோடு கனகபுரம் சாத்தந்தை காலிங்கராயன்.

கி.பி.1269 ஆண்டு தொடங்கி 12 ஆண்டுகள் வேலை நடந்து 1281 ஆம் ஆண்டு தை மாதம் 5 ஆம் நாள் அணை, வாய்க்கால் பணிகள் நிறைவுற்றன.

காலிங்கராயன் வாய்க்கால் ஈரோடு நகரில் பெரும்பள்ளம் ஓடையைக் கடக்கிறது. ஓடை பள்ளமாக இருப்பதால் ஒரு பாலம் கட்டி வாய்க்கால் மேலே செல்லவும் கீழே பெரும்பள்ளம் ஓடவும் ஏற்பாடு செய்தார் காலிங்கராயன். பாலப்பகுதி "காரைவாய்க்கால்" என்று பெயர் பெற்றது.

"இவ்வித அமைப்பு கிரேக்கம்-ரோம் நாடு தவிர இந்தியாவில் எங்கும் இல்லை" என்கிறார் தொல்லியல் அறிஞர் எ.சுப்பராயலு. 7.11.1800 அன்று ஈரோடு வந்த இங்கிலாந்துப் பயணி புக்கானன் இப்பாலத்தைப் பாராட்டுகிறார். ஜீன் டிலோக் என்ற பிரான்சு நாட்டுத் தொல்லியல் அறிஞர் இப்பாலத்தைப் பார்வையிட்டுப் படம் பிடித்து தான் எழுதிய "இந்தியாவின் தொன்மைப் பாலங்கள்"(1984) என்ற நூலில் வெகுவாகப் புகழ்கிறார்.

உலக அறிஞர்கள் பாராட்டும் மிக அரியதான இப்பாலம் கட்டப்பட்ட விதத்தை நாட்டுப்புறப் பாடல் ஒன்று வளக்குகிறது.

"அசையாத கல்லின்மேல் பிசகாம லேநல்ல
ஆயிரம் சேரியமுது
அசைவிட்டு துளையிட்டு சிலம்பிட்டு மேநல்ல
அசையாமல் தூண்நிறுத்தி
அகாண்டமாய் வருகின்ற பெரும்பள்ளம் தன்னிலே
அதிலும் ஒரு பாலமாக
ஆறுக்கு ஆர் திறணை நாலுக்குநால் செவுதி
ஆறுபோல் பெருகி வரவும்"

என்பது அப்பாடலாகும். (நீளம், அகலம் குறிக்கப் பயன்பட்ட திறணை, செவுதி என்ற சொல் இதுவரை எந்த அகராதியிலும் இடம் பெறவில்லை).

1832 ஆம் ஆண்டு பேப்பர் துரை என்னும் "சிவில் என்ஜினியர்" சிறு மராமத்துப் பணிகள் செய்தார். 732 வருடங்கள் கடந்தும் காலிங்கராயன் புகழ் பாடி மிகவும் கம்பீரமாக

காட்சியளிக்கிறது இப்பாலம். இப்பாலம் ஈரோட்டுக்கு மட்டுமல்ல தமிழ்நாட்டுக்கே பெருமை தரும் அரிய வரலாற்றுச் சின்னம் ஆகும்.

சீரும் சிறப்பும் மிக்க இப்பாலத்தை இன்று நாம் எப்படி வைத்திருக்கிறோம். துர்நாற்றம் பிடித்த குப்பை கூளங்கள் மிகுந்த பெரும் பள்ளத்தின் சாக்கடை நீர்தான் இப்புனிதப் பாலத்தில் பாய்கிறது. அருகில் செல்லவே இயலாத நிலையில் சேறும் சகதியும். இது கீழே உள்ள நிலை. மேலே வாய்க்காலின் காரையை அமிலக்கழிவுநீர் பலமிழக்கச் செய்யக்கூடும். இப்பாலத்தை நாம் அதன் பாரம்பரியப் பெருமைக்கு ஏற்பப் பராமரிக்க வேண்டும்.

பாலத்தின் அருகில் பெரும்பள்ளச் சாக்கடை நீர் செல்லாதவாறு மாற்று வழி அமைக்கவேண்டும். சுரங்கம் அமைத்துப் பாலத்தைக் கடக்கச் செய்யலாம். மக்கள் சென்று பாலத்தைப் பார்க்கும் வண்ணம் இரு முனைகளிலும் தூய்மையான வழி பசுமைப் பொலிவுடன் அமைக்க வேண்டும். அணை, வாய்க்கால், பாலம் பணி முடிந்த தை 5 ஆம் நாள் காலிங்கராயன் நாளாக அனுசரித்து நினைவுகூரும் வண்ணம் நிகழ்வு நடத்த வேண்டும். காலிங்கராயன் வாய்க்கால் கரையில் உள்ள ஊர்கள் தோறும் தை 5 நினைவு கூரப்பட வேண்டும். இப்பாலத்தின் பெருமையை நாடறியப் பாலப்படத்துடன் அஞ்சல்தலை வெளியிட வேண்டும். பழமையைப் போற்றும் இச்செயல் நாம் காலிங்கராயனுக்குச் செய்யும் நன்றிக்கடமையாகும்.

காலிங்கராயன் திரு உருவச்சிலை அணையிலும், அவர் ஆட்சி செய்த வெள்ளோட்டிலும் அமைக்கவேண்டும். நினைவு அஞ்சல்தலை வெளியிடுவதுடன் வெள்ளோட்டில் நினைவு மண்டபம் கட்டி தை 5 ஆம் நாள் அரசு விழா எடுக்க வேண்டும்.

இவையனைத்தும் விரைந்து செய்யவேண்டும் என்று கொங்கு ஆய்வு மைய ஆய்வாளர் புலவர் செ.இராசு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புலவர் செ. இராசு

5.6.13

அன்புடையீர்,

வணக்கம்.

நலம். வாழ்த்துக்கள்.

இத்துடன் சான்றிதழும், காலக்கோவையும் வண்ணப் படம் பொருந்திய அச்சில் 450 பேருக்கு வழங்கப்பட்டன. நன்றி.

அன்புள்ள

செ. இராசு